தனியாருக்கு குடிநீர் விநியோக ஒப்பந்தம்: ரத்துசெய்யக் கோரி மாநகராட்சி அவசரக் கூட்டம்

சேலம் மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் செவ்வாய்க்கிழமை நடைபெற்ற அவசரக் கூட்டத்தில் பங்கேற்ற உறுப்பினர்கள்.

சேலம், ஆக. 18: சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணியை தனியாருக்கு வழங்கும் தீர்மானத்தை ரத்துசெய்ய வலியுறுத்தி, மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் அவசரக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

சேலம் மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணியை, தனியார் ஒப்பந்த நிறுவனம் மேற்கொள்ள தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. இதற்கு பொதுமக்கள் உள்ளிட்ட பல்வேறு தரப்பினரும் கடும் எதிர்ப்பு தெரிவித்த நிலையில், தொடர் போராட்டங்களும் நடைபெற்றன.

இதைத் தொடர்ந்து, கடந்த மாதம் நடைபெற்ற மாநகராட்சிக் கூட்டத்தில் மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் அனைத்து உறுப்பினர்கள் ஒத்துழைப்போடு, தனியாருக்கு குடிநீர் ஒப்பந்தம் வழங்கும் திட்டத்தை ரத்துசெய்து தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

ஆனால், இந்த தீர்மானத்தை மாநகராட்சி ஆணையர் முறையாக நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமைச் செயலாளருக்கு அனுப்பவில்லை என்ற விவரம் தெரியவந்தது. இதைத் தொடர்ந்து, மேயர் ஆ.ராமச்சந்திரன் தலைமையில் மாநகராட்சியின் 60 உறுப்பினர்கள் பங்கேற்ற அவசரக் கூட்டம் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

இதில், குடிநீர் விநியோகம் செய்யும் பணியை தனியாருக்கு வழங்கும் தீர்மானத்தை ரத்துசெய்ததை நடைமுறைப்படுத்த வரும் 24-ஆம் தேதி சென்னைக்கு செல்ல முடிவு செய்யப்பட்டது.

பின்னர் இதுகுறித்து மாநகராட்சி மேயர் ஆ.ராமச்சந்திரன் கூறுகையில், மாநகராட்சியில் குடிநீர் விநியோகம் செய்யும் பணியை தனியாருக்கு வழங்கும் திட்டத்தை ரத்துசெய்து அனுப்பப்பட்ட தீர்மான நகல் விவரங்கள் முறையாக நகராட்சி நிர்வாக ஆணையத்துக்கு அனுப்பப்படவில்லை.

இந்த கோரிக்கையை வலியுறுத்தி அனைத்து உறுப்பினர்களும் வரும் 24-ஆம் தேதி நகராட்சி நிர்வாக ஆணையர் மற்றும் தலைமைச் செயலாளரை சந்திக்க உள்ளோம். முடிந்தால், இது தொடர்பாக முதல்வர் ச.ஜோசப் விஜயை சந்தித்தும் முறையிடுவோம் என்றார்.

கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி பால் உற்பத்தியாளர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டம்

சேலம் கோட்டை மைதானத்தில் பால் கேன்களுடன் செவ்வாய்க்கிழமை கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்ட பால் உற்பத்தியாளர்கள்.

சேலம், ஆக. 18: பால் கொள்முதல் விலையை உயர்த்த வலியுறுத்தி, பால் உற்பத்தியாளர்கள் கவன ஈர்ப்பு ஆர்ப்பாட்டத்தில் செவ்வாய்க்கிழமை ஈடுபட்டனர்.

தமிழ்நாடு பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்கம் மற்றும் ஆவின் பிரதம சங்கங்களின் பணியாளர்கள் கூட்டமைப்பு சார்பில், சேலம் கோட்டை மைதானத்தில் நடைபெற்ற ஆர்ப்பாட்டத்துக்கு, பால் உற்பத்தியாளர்கள் நலச் சங்க பொதுச் செயலாளர் எம்.ஜி.ராஜேந்திரன் தலைமைவகித்தார்.

இதில், பசும்பால் கொள்முதல் விலை லிட்டருக்கு ரூ. 45-ஆகவும், எருமைப் பால் லிட்டருக்கு ரூ. 60-ஆகவும் உயர்த்த வேண்டும், கொள்முதல் விலையில் சங்கங்களின் நிர்வாக செலவுக்கு லிட்டருக்கு 5 சதவீத விளிம்புத் தொகை வழங்க உத்தரவிட வேண்டும், பால் கொள்முதல் விலை நிர்ணயம் செய்வதில் திடச்சத்து 12 சதவீதமாக கொண்டு விலையை நிர்ணயிக்க வேண்டும், பாலின் கொழுப்பு அல்லாத இதர சத்துகளின் தரம் அறிய எம்ஆர்எஸ்ப் பார்முலாவை கைவிட்டு, ஐஎஸ்ஐ பார்முலாவை அமல்படுத்த வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி பால் கேனுடன் முழக்கங்கள் எழுப்பினர்.

இதுகுறித்து நிர்வாகிகள் கூறுகையில், தனியார் நிறுவனங்கள் தற்போது ஆவின் நிறுவனங்களைவிட அதிக அளவில் பால் கொள்முதல் செய்கின்றன. முன்பு 35 லட்சம் லிட்டராக இருந்த பால் கொள்முதல் தற்போது 28 லட்சம் லிட்டராக குறைந்துள்ளது. இதன் காரணமாக ஆவின் கூட்டுறவு சங்கங்கள் மூடப்படும் நிலை ஏற்பட்டுள்ளது.

எனவே, பால் கொள்முதல் விலையை ரூ. 10-ம், விற்பனை விலையை ரூ. 15-ம் உயர்த்த வேண்டும். பள்ளி சத்துணவுத் திட்டத்தில் மாணவர்களுக்கு ஆவின் பால் வழங்க வேண்டும் என தெரிவித்தனர்.

தினமணி
சந்தா குறித்த விவரம் மற்றும் புகார்களுக்கு...

சேலம் மேட்டூர் சங்ககிரி எடப்பாடி	95666 11366
ஏற்காடு ஆத்தூர்	99946 46385
தருமபுரி	: 84896 34827

உதவி மைய எண் : 88070 00218

தினமணி
எமது செய்தியாளர்களை தொடர்பு கொள்ள...

சேலம்	98405 90012
ஓமலூர்	94433 93373
மேட்டூர்	94432 23065
ஏற்காடு	94432 01447
சங்ககிரி	94434 14850
ஆத்தூர்	93642 22063
தம்மம்பட்டி	94434 71248
எடப்பாடி	98659 77117
வாழப்பாடி	96009 69118
ஆட்டையாம்பட்டி	94892 94473

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்

IDFC FIRST Bank

(முன்பு IDFC வங்கி லிமிடெடாக இருந்து தற்போது IDFC பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுவது) I பெருநிறுவன அடையாள எண்: L65110TN2014PLC097792
பதிவு அலுவலகம்: KRM டவர்ஸ், 8ஆவது தளம், ஹாரிங்டன் சாலை, சேத்துப்பட்டு, சென்னை – 600031.
தொ.பே.: +91 44 4564 4000 I தொலைநகல்: +91 44 4564 4022.

(கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002, பிரிவு 13(2)–இன் கீழான அறிவிப்பு)

கீழ்க்காணும் கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடிடம் (முன்பு IDFC வங்கி லிமிடெடாக இருந்து தற்போது IDFC பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுவது) கீழே குறிப்பிட்டுள்ள ஈட்டுறுதி செய்யப்பட்ட கடன்களைப் பெற்றுள்ளனர். கீழே குறிப்பிட்டுள்ள கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் ஆகியோரின் கடன்கள் உரிய சொத்துக்களை அடமானம் வைத்து ஈடு செய்யப் பெற்றுள்ளன. கடன் ஒப்பந்தங்களில் கூறப்பட்டுள்ள விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகள் ஆகியவற்றை அவர்கள் சரியாகக் கடைப்பிடிக்கத் தவறியதாலும் கடனைச் சரிவரத் திருப்பிச் செலுத்தாததாலும் இந்திய ரிசர்வ் வங்கியின் வழிகாட்டுதல்களின்படி அவர்களின் கடன்கள் செயல்படாச் சொத்தாக (NPA) வகைப்படுத்தப்பட்டுள்ளன. அவர்கள் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்குச் (முன்பு IDFC வங்கி லிமிடெடாக இருந்து தற்போது IDFC பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுவது) செலுத்த வேண்டிய தொகைகள் தொடர்புடைய அறிவிப்புகளின்படி பின்வரும் அட்டவணையில் குறிப்பாக விவரிக்கப்பட்டுள்ளன. அவற்றுடன் அவற்றுக்கான வட்டியும் செலுத்தப்பட வேண்டும். இந்த வட்டியானது உரிய நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படி கணக்கிடப்படும்.

வ. எண்	கடன் கணக்கு எண்	கடன் வகை	கடன்தாரர்கள் மற்றும் கூட்டுக் கடன்தாரர்கள் பெயர்	பிரிவு 13(2)–இன் கீழான அறிவிப்பு நாள்	பிரிவு 13(2) அறிவிப்புப்படி நிலுவைத்தொகை
1	10072551347	BBG	1. M/s.சதீஷ் டெக்ஸ் 2. ரங்கசாமி செட்டி மனோகரன் 3. சதீஷ்குமார் மனோகரன் 4. ரஞ்சித்குமார் மனோகரன் 5. மைதிலி மனோகரன்	04.08.2026	ரூ.1,12,80,260.77

சொத்து முகவரி: இன்றியமையாப் பகுதிகள் அனைத்துடனும் கூடிய சொத்து. அமைவிடம் – சேலம் மாவட்டம், சேலம் மேற்குப் பதிவு மாவட்டம், தாராமங்கலம் சார்பதிவு மாவட்டம், ஓமலூர் வட்டம், தேசவிளக்குத் தெற்கு கிராமத்தைச் சேர்ந்த பட்டா எண் 1112, சர்வே எண் 206/21, புஞ்சை ஹெக்.0.16.0, தீர்வை ரூ.0.25. இதில் அடங்கிய புஞ்சை ஏக்கர் 0.10 சென்ட் பரப்பளவு கொண்ட நிலம் இந்த விவரணைக்கு உட்பட்டது. இதன் எல்லைகள் மற்றும் அளவுகள் பின்வருமாறு:– எல்லைகள்:– கிழக்கு: ரங்கசாமிச் செட்டியாருக்குச் சொந்தமான எஞ்சிய நிலம், மேற்கு: ராமசாமிச் செட்டிக்குச் சொந்தமான நிலம், வடக்கு: ரங்கசாமிச் செட்டியாருக்குச் சொந்தமான எஞ்சிய நிலம், தெற்கு: சர்வே எண் 206/1C–இல் அமைந்துள்ள பொது வழி.
மேற்கண்ட எல்லைகளுக்கிடையேயான பரப்பளவு – புஞ்சை ஏக்கர் 0.10 சென்ட் நிலம் மற்றும் தரைத்தளம் 1791 சதுர அடி, முதல் தளம் 714.5 சதுர அடி கொண்ட RCC கட்டடம் மற்றும் 655.5 சதுர அடி கொண்ட ACC கூரையிட்ட கட்டடம் ஆகியவற்றுடன் சொத்தோடு இணைந்துள்ள அனைத்து வழி உரிமைகளும் புழக்க உரிமைகளும் உட்பட. மேற்படி சொத்தானது தேசவிளக்குத் தெற்கு கிராம ஊராட்சி வரம்புக்கு உட்பட்டது.

IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்குச் (முன்பு IDFC வங்கி லிமிடெடாக இருந்து தற்போது IDFC பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுவது) செலுத்த வேண்டிய தொகைகளை மேலே அட்டவணையில் குறிப்பிட்டுள்ள விவரங்களின்படி அந்தந்த நாட்களிலிருந்து ஒப்பந்த விகிதப்படியான வட்டியுடனும் செலவினங்கள், கட்டணங்கள் முதலானவற்றுடனும் இந்த அறிவிப்பு வெளியிடப்படும் நாளிலிருந்து 60 நாட்களுக்குள் செலுத்துமாறு நீங்கள் இதன் மூலம் அழைக்கப்படுகிறீர்கள். தவறினால் IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெடுக்கு (முன்பு IDFC வங்கி லிமிடெடாக இருந்து தற்போது IDFC பர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுவது) வர வேண்டிய தொகையைத் திரும்பப் பெறும் பொருட்டு மேலே குறிப்பிடப்பட்டுள்ள அடமானச் சொத்துக்கள் மீது கீழே கையொப்பமிட்டுள்ளவர் SARFAESI சட்டம், பிரிவு 14 மற்றும் பிரிவு 13(4)–இன் கீழ் நடவடிக்கைகள் மேற்கொள்ள வேண்டி வரும். மேலும் மேற்கூறிய சட்டத்தின் பிரிவு 13(13)–இன்படி கடனீட்டுச் சொத்தை விற்க / குத்தகைக்கு விட அல்லது இது போன்ற வேறு எவ்வகையிலும் பெயர் மாற்றம் செய்ய நீங்கள் தடை செய்யப்பட்டுள்ளீர்கள்.

ஒம்–
அதிகாரப்பூர்வ அலுவலர்,
IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட்
(முன்பு கேப்பிட்டல் ஃபர்ஸ்ட் லிமிடெடாக இருந்து பின்னர் IDFC வங்கி லிமிடெடுடன் இணைக்கப்பட்டுத் தற்பொழுது IDFC ஃபர்ஸ்ட் வங்கி லிமிடெட் என அறியப்படுகிறது)

நாள் : 19.08.2026
இடம் : சேலம், தமிழ்நாடு

விம்ஸ் கல்லூரியில் சைபர் குற்ற பாதுகாப்பு விழிப்புணர்வு

சைபர் குற்ற விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்ற கல்லூரி பேராசிரியர்கள், மாணவர்கள்.

ஆட்டையாம்பட்டி, ஆக. 18: விநாயகா மிஷனின் விம்ஸ் வளாக அலைடு ஹெல்த் சயின்ஸ் கல்லூரியில் முதலாம் ஆண்டு மாணவர்களுக்கான சைபர் குற்றங்கள் மற்றும் சைபர் பாதுகாப்பு விழிப்புணர்வு நிகழ்ச்சி கல்லூரி வளாகத்தில் செவ்வாய்க்கிழமை நடைபெற்றது.

கல்லூரி முதன்மையர் செந்தில்குமார் முன்னிலை வகித்து வரவேற்றார். சிறப்பு அழைப்பாளராக சேலம் மாநகர சைபர் கிரைம் காவல் நிலைய ஆய்வாளர் மெட்டில்டா ஜோசி பங்கேற்று சைபர் குற்றங்கள், இணையவழி மோசடிகள், இணைய பாதுகாப்பு மற்றும் குற்றங்களைத் தடுக்க முன்னெச்சரிக்கை நடவடிக்கைகள் குறித்து மாணவர்களுக்கு விழிப்புணர்வை ஏற்படுத்தினார்.

தொடர்ந்து, கல்லூரி மாணவர்கள், பேராசிரியர்கள் அனைவரும் பாதுகாப்பான மற்றும் பொறுப்பான இணைய பயன்பாட்டை வலியுறுத்தும் வகையில், சைபர் குற்ற விழிப்புணர்வு உறுதிமொழி ஏற்றனர். இதற்கான ஏற்பாட்டை கல்லூரி தீக்ஷராம் குழு உறுப்பினர்கள் செய்திருந்தனர்.

தேசிய சமூக கூட்டமைப்பு சார்பில் சிறந்த ஆளுமைகளுக்கு விருது

சேலம், ஆக. 18: தேசிய சமூக கூட்டமைப்பு சார்பில், சேலம் மாநகரில் சிறந்த ஆளுமைகளுக்கு விருது வழங்கும் விழா அண்மையில் நடைபெற்றது.

80-ஆவது சுதந்திர தினத்தை முன்னிட்டு நடைபெற்ற இந்த விழாவில், சேலம் சரோ ஹோமியோ கேர் தலைமை மருத்துவர் சசிகுமாரின் 31 ஆண்டு மருத்துவ சேவையை பாராட்டி மாநகரில் சிறந்த மருத்துவருக்கான விருது வழங்கப்பட்டது.

விழாவுக்கு, தேசிய சமூக கூட்டமைப்பின் தலைவர் நாகா. ஆர்.அரவிந்தன் தலைமை வகித்தார். இதில், துணை வட்டாட்சியர் கங்கா பிரியதர்ஷினி, முன்னாள் காவல் துறை துணைக் கண்காணிப்பாளர் உமா சங்கர், மாமன்ற உறுப்பினர் இமயவரம்பன், டாக்டர் சண்முகசுந்தரம் ஆகியோர் பங்கேற்று வாழ்த்தி பேசினர்.

சேலம் மாநகரில் சிறந்த ஆளுமைக்கான விருதுபெற்ற சேலம் சரோ ஹோமியோ கேர் தலைமை மருத்துவர் சசிகுமார்.

வடக்குநாடு ஊராட்சியை மூன்றாக பிரிக்கக் கோரிக்கை

வாழப்பாடி, ஆக. 18: சின்ன கல்வராயன் மலை வடக்குநாடு ஊராட்சியை பிரித்து, 3 புதிய ஊராட்சிகளை ஏற்படுத்த வேண்டுமென இப்பகுதி மலைக்கிராம பழங்குடியின மக்களிடையே கோரிக்கை எழுந்துள்ளது.

சேலம் மாவட்டம், பெத்தநாயக்கன்பாளையம் ஊராட்சி ஒன்றியத்திலுள்ள சின்ன கல்வராயன் மலை வடக்கு நாடு ஊராட்சியில் 35 குக்கிராமங்கள் உள்ளன. இக்கிராமங்களில் ஏறக்குறைய 19 ஆயிரம் பழங்குடியின மக்கள் வசித்து வருகின்றனர். ஊராட்சியின் பரப்பளவு மட்டுமின்றி, கிராமங்களின் எண்ணிக்கையும், மக்கள்தொகையும் அதிகமாக இருப்பதால், அனைத்து குக்கிராமங்களுக்கும் குடிநீர், தெருவிளக்கு, சாலைகள், கழிவுநீர் சாக்கடை உள்ளிட்ட அடிப்படை வசதிகளை செய்து கொடுப்பதிலும், மலைக்கிராம பழங்குடியின மக்களுக்கு அரசு நலத் திட்டங்கள் மற்றும் உள்ளாட்சி நிர்வாக சேவைகள் முழுமையாக சென்றடைவதிலும் சுணக்கம் ஏற்படுகிறது.

இதனால், இந்த ஊராட்சிக்குள் பட்ட பல மலைக் கிராமங்களுக்கு இன்றளவிலும் போதிய அடிப்படை வதிகள் கிடைக்காமல் மக்கள் அவதிக்குள்ளாகி வருகின்றனர். எனவே, சின்ன கல்வராயன் மலை வடக்கு நாடு ஊராட்சியை பிரித்து 3 புதிய ஊராட்சிகளை ஏற்படுத்த வேண்டுமென மலைக்கிராம மக்களிடையே கோரிக்கை எழுந்துள்ளது.

SU டோல் ரோடு பிரைவேட் லிமிடெட்
(ரிலையன்ஸ் இன்ஃப்ராஸ்ட்ரக்சர் லிமிடெட்)
2ம் தளம், பிளாட் நெ.B7, MIDC ஏரியா, மரோல் கிரால் ரோடு'B',MIDC போலிஸ் ஸ்டேஷன் எதிரில், அந்தேரி கிழக்கு , மும்பை – 400093

மேட்டுப்பட்டி கி.மீ. 21+750 நத்தக்கரை. கி.மீ. 73+760 வீரசேழபுரம் மேற்கு கி.மீ. 105+00-ல் நிறுவப்பட்டுள்ள எங்களது சுங்கச்சாவடிகளில் 01.09.2026, 00.00 மணியிலிருந்து திருத்தியமைக்கப்பட்ட உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படும்

பொது அறிவிப்பு

இதனால் பொதுமக்களுக்கு அறிவிக்கப்படுவது யாதெனில், இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையத்தின் கடித எண் NHAI/11015/45-A/2018/ RO Chennai / E-215224 / 2112 தேதி 06.08.2026 கீழ்கண்ட அட்டவணையில் குறிப்பிட்டுள்ளபடி தேசிய நெடுஞ்சாலை எண் 79-ல் கி.மீ.21+750, மேட்டுப்பட்டி, கி.மீ. 73+760, நத்தக்கரை மற்றும் கி.மீ. 105+000 -ல் உள்ள வீரசோழபுரம் கிராமங்களில் நிறுவப்பட்டுள்ள எங்களது சுங்கச்சாவடிகளில் 01.09.2026, 00.00 மணியிலிருந்து திருத்தியமைக்கபட்ட உபயோகிப்பாளர் கட்டணம் வசூலிக்கப்படும்.

வாகன வகை	ஒரு முறை பயன்பாட்டிற்கான கட்டணம் (ரூ.)	ஒரே நாளில் பன்முறை பயன்பாட்டிற்கான கட்டணம் (ரூ) (FASTag வாகனங்களுக்கு மட்டும்)	பன்முறை பயன்பாட்டிற்கான மாத கட்டணம் (ரூ)
கார் / வேன் /ஜீப்	65	100	1990
இலகுரக வாகன வகை	115	175	3485
டிரக் / பஸ்	230	350	6965
பல அச்சுகள் கொண்ட வாகனம் (>2 அச்சுகள்)	375	560	11195

1. (1) சுங்கசாவடியை மையமாகக் கொண்டு 10&20 கி.மீ. சுற்றுவட்டாரத்திற்குட்பட்ட வர்த்தகரீதியல்லாத கார் / ஜீப் / வேன் வாகனங்களுக்கு உண்டான உரிய மாதாந்திர சுங்க கட்டணம் முறையே ரூ.150/- & ரூ.300/-
   (2) பள்ளி பேருந்துகளுக்கு மாதாந்திர கட்டணம் ஒரு மாதத்திற்கு ரூ.1000/-
   (3) இலகு வர்த்தக உள்ளூர் வாகனம் ரூ. 15 ஒவ்வொரு முறையும் (பில் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
   (4) இலகு டிரக் உள்ளூர் வாகனம் ரூ. 25 ஒவ்வொரு முறையும் (பில் நகல் சமர்ப்பிக்கப்பட வேண்டும்)
2. மேற்படி கட்டணங்கள் கி.மீ. 0+313 முதல் 136+670 வரை உள்ள 136.357 கி.மீ நீள சாலைக்கு பொருந்தும் –(NH-79)
3. மேற்படி சுங்கச்சாவடியில் மேற்கூறிய சலுகைகள் மட்டும் அனுமதிக்கப்படுகின்றன. சலுகை ஒப்பந்தத்தில் குறிப்பிட்டுள்ள சில குறிப்பிட்ட வாகனங்களுக்கு மட்டுமே சலுகைகள் வழங்கப்படும். 13.01.2012 தேதியிட்ட கட்டண அறிக்கை SO.No.70(E)படி கட்டண விலக்கு அளிக்கப்பட்டுள்ள வாகனங்கள் பட்டியலிடப்பட்டுள்ளன.
4. அனுமதிக்கப்பட்ட கமை அளவுக்கு மேல் கூடுதலாக ஏற்றப்பட்ட வாகனங்கள் நிர்ணயிக்கப்பட்ட கட்டணத்தை விட 10 மடங்கு வரை செலுத்த வேண்டும். நெடுஞ்சாலையைப் பயன்படுத்த வேண்டுமானால் கூடுதல் கமையை அகற்ற வேண்டும்.
5. 19.07.2007-ம் தேதி இட்ட சலுகை ஒப்பந்தமானது 14.01.2033 அன்று முடிவடைகிறது ஒப்பந்த காலத்திற்கு பிறகு சுங்கவரி கட்டணம் 40% ஆக குறைக்கபடும்.
6. அரக இதழில் வெளியிடப்பட்ட 13.01.2012 தேதியிட்ட கட்டணங்கள் தொடர்பான அறிவிப்பை மற்றும் திருத்தப்பட புதிய கட்டணங்கள், ஒப்புதல் சலுகை ஒப்பந்தத்தில் உள்ள ஷரத்துகள் அடங்கிய 06.08.2026 தேதியிட்ட NHAI கடிதம் ஆகியன பார்வையிட இணையதளம் http://nhai.gov.in செல்லவும்.
7. விவரங்கள் தேவைப்பட்டால் / புகார்கள் / ஆலோசனைகள் தெரிவிக்க விரும்பினால் அதற்கான பெயர் & முகவரி.

	சலுகை ஒப்பந்ததாரர்	Independent Engineer	இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணையம் திட்ட அமலாக்க பிரிவு
பிரதிநிதியின் பெயர்	திரு. P.பரமன்	திரு.A.ராபர்ட் ராஜ்	திரு.சையத் அமானுல்லா
விலாசம்	வருவாய் மேலாளர் SU டோல் ரோடு பி.லிட், மேட்டுப்பட்டி சுங்கசாவடி மையம் ஆத்தூர் மெயின் ரோடு வாழப்பாடி வட்டம், சேலம் - 639 111	குழு தலைவர், S.A.இன்டிராஸ்ட்ரக்சர் கன்சல்டன்ட் பி.லிட்., குவெஸ்ட் இன்ஜினியர்ஸ் அண்டு கனசல்டன்ட்ஸ் பி.லிட், பிளாட் எண்: 70, முதல் தளம், கோவிந்தம்மாள் நகர், சேலம் - 636 201	DGM (T) & திட்ட இயக்குனர் இந்திய தேசிய நெடுஞ்சாலை ஆணைய அலுவலகம் கதவு எண். 26, முதல் தளம், விஜிபி நகர் மேற்கு, வழுதரெட்டி அஞ்சல், விழுப்புரம்-605 401.
மொபைல் எண்	99942 96798	84894 42837	04146-258247 / 8

இண்டியன் பேங்க் Indian Bank
இலாஹாபாத் ALLAHABAD

பேர்லேண்ட்ஸ் மெயின் ரோடு கிளை,
அருண் பிளாசா, நெ.85/D, அத்வைத ஆஸ்ரம் ரோடு,
பேர்லேண்ட்ஸ் (அஞ்சல்), சேலம் - 636 016

APPENDIX- IV-A" [See proviso to rule 8 (6) / 9(1)]*(*Retain whichever is applicable)

அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்கான விற்பனை அறிவிப்பு

SARFAESI சட்டம் 2002-ன் கீழ் மற்றும் செக்யூரிட்டி இன்ட்ரஸ்ட் அமலாக்க விதிகள் 2002-ன் கீழ் விதி 8(6) / 9(1)* (*எது பொருந்துகிறதோ அதை வைத்திருங்கள்)-ன் படி அசையாச் சொத்துக்களை விற்பனை செய்வதற்காக கொடுக்கப்படும் மின்னணு ஏல விற்பனை அறிவிப்பு.

இதன்மூலமாக பொதுமக்களுக்கும் மற்றும் குறிப்பாக கடன் பெற்றவர்(கள்) மற்றும் உத்திரவாதம் அளித்தவர்(கள்) ஆகியோருக்கு தெரிவிப்பது யாதெனில், செக்யூரிடி கிரெடிட்டார்–ஆன **இந்தியன் வங்கி, பேர்லேண்ட்ஸ் மெயின் ரோடு கிளையின்** அங்கீகரிக்கப்பட்ட அதிகாரியால் **ஆக்கப்பூர்வமான** சுவாதீனம் எடுக்கப்பட்ட, இதன்கீழ் விவரிக்கப்பட்டுள்ளதும் மற்றும் செக்யூரிடி கிரெடிட்டார் வசம் அடமானம் வைக்கப்பட்டுள்ளதுமான அசையாச் சொத்தானது **1. M/s. TN Transconnect (கடன்தாரர்),** 8/354, CTO காலனி, பாலாஜி நகர், அழகாபுரம், சேலம் - 636016. **2. திரு. P.அறிவுக்கரக (உரிமையாளர் & ஜாமீன்தாரர்),** த/பெ. P. பிரகாசம், 8/354, CTO காலனி, பாலாஜி நகர், அழகாபுரம், சேலம் - 636016. **3. திருமதி. P.மலர்விழி (ஜாமீன்தாரர் & அடமானதாரர்),** க/பெ. P. பிரகாசம், 8/354, CTO காலனி, பாலாஜி நகர், அழகாபுரம், சேலம் - 636016 வசம் இருந்து செக்யூரிடி கிரெடிட்டார்–ஆன **இந்தியன் வங்கி, பேர்லேண்ட்ஸ் மெயின் ரோடு கிளைக்கு** வரவேண்டிய நிலுவைத் தொகை **18-08-2026** அன்றுள்ளபடி **ரூ.1,30,28,779/- (ரூபாய் ஒரு கோடியே முப்பது இலட்சத்து இருபத்து எட்டாயிரத்து எழுநூற்று எழுபத்து ஒன்பது மட்டும்)** மற்றும் வட்டியுடன் இதர செலவினங்களை வசூலிக்கும் பொருட்டு **'எப்படி எங்கு என்ன நிலையில் உள்ளனவோ அதே நிலையில்' 07-09-2026** அன்று விற்பனை செய்யப்படும்.

அசையாச் சொத்து விபரம்

சேலம் மாவட்டம், சேலம் மேற்கு பதிவு மாவட்டம், சூரமங்கலம் துணைப் பதிவு அலுவலகம், அழகாபுரம் கிராமத்தில் ச.எண்.92/2, 92/3, 92/4, வறண்ட 5.92 ஏக்கர், மதிப்பீடு ரூ.9.40 பரப்பளவு 1.90.50 ஏக்கர் புதிய சர்வே எண்.92/4A1 படி, தற்போதைய டவுன் சர்வே எண்.76 படி, வார்டு D, பிளாக் 37, பிளாட் எண்.25–ன் பரப்பளவு 2400 ச.அடி. புதிய சப்-டிவிசன் படி சர்வே எண்.92/4A1B. இச்சொத்து C.T.O. காலனி மற்றும் சேலம் மாநகராட்சி எல்லைக்குள் அமைந்துள்ளது. பரப்பளவு 2400 ச.அடி இதில் பிளாட்டின் அளவுகள் கிழமேல் இருபுறமும் 40 அடி மற்றும் தென்வடல் இருபுறமும் 60 அடி. மொத்தப் பரப்பளவு 2400 ச.அடி நிலம் இதனுடன் கட்டிடம் மற்றும் அனைத்து வழிப்பாதை உரிமைகள் மற்றும் அனைத்து உரிமைகளும் மேன்றவை சகிதம். **எல்லைகள் :** காளியன்னா கவுண்டருக்கு சொந்தமான பிளாட் எண்.26–க்கு **கிழக்கு,** T.R.ராமகிருஷ்ணனுக்கு சொந்தமான பிளாட் எண்.24–ல் உள்ள வீட்டிற்கு **மேற்கு,** குணசேகரனுக்கு சொந்தமான பிளாட் எண்.34–ல் உள்ள வீட்டிற்கு **வடக்கு,** ராஜாஜி நகர் கிழமேல் 20 அடி C.T.O. காலனி ரோட்டிற்கு **தெற்கு.**

சொத்து மீதான வில்லங்கம்	இல்லை	நிர்ணயத் தொகை	Rs.2,11,00,000/-
முன்வைப்புத் தொகை	Rs.21,10,000/-	ஏலப்பெருக்கு தொகை	Rs.1,00,000/-
மின்னணு ஏல தேதி & நேரம்	07-09-2026 - 10 am to 4 pm	சொத்து அடையாள எண்	IDIB7412539591

ஆன்லைன் ஏலத்தில் பங்கேற்க ஏலதாரர்கள் எங்கள் மின் ஏல சேவை வழங்குனரான PSB Alliance Ltd. இணையதளத்தை (https://baanknet.com) பார்வையிடவும். தொழில்நுட்ப உதவிக்கு 8291220220 எண்ணை அழைக்கவும். பதிவு நிலை மற்றும் EMD தொடர்பான தகவல்களுக்கு support.baanknet@psballiance.com என்ற மின்னஞ்சல் முகவரியில் தொடர்பு கொள்ளவும்.

சொத்து விவரங்கள் மற்றும் சொத்தின் புகைப்படம் மற்றும் ஏல விதிமுறைகள் மற்றும் நிபந்தனைகளுக்கு https://baanknet.com என்ற இணையதளத்தை பார்வையிடவும், இணையதளம் தொடர்பான விளக்கங்களுக்கு PSB Alliance Pvt. Ltd எண் 8291220220ஐ தொடர்பு கொள்ளவும்.

https://baanknet.com இணையதளத்தில் உள்ள சொத்து விவரங்களை தெரிந்துகொள்ள மேலே குறிப்பிட்டுள்ள சொத்து அடையாள எண்ணைப் பயன்படுத்த ஏலதாரர்கள் அறிவுறுத்தப்படுகிறார்கள்.

இடம் : சேலம்
தேதி : 18-08-2026
அங்கீகரிக்கப்பட்ட அதிகாரி
இந்தியன் வங்கி

OMKARA ஓம்காரா அசெட்ஸ் ரீகன்ஸ்டிரக்ஷன் பிரைவேட் லிமிடெட்
பெருநிறுவன அடையாள எண்: U67100TZ2014PTC020363
பதிவு அலுவலகம்: 9, M.P.நகர், 1ஆவது தெரு, கொங்கு நகர் விரிவு, திருப்பூர் – 641607.
பெருநிறுவன அலுவலகம்: கோஹினூர் சதுக்கம், 47ஆவது தளம், N.C.கெல்கர் மார்க், R.G.கட்கரி சௌக், தாதர் (மேற்கு), மும்பை–400028. தொ.பே: 022–6923 1111

கடனீட்டுச் சொத்துக்களை ரொக்கமாக்குதல் மற்றும் சீரமைத்தல் மற்றும் கடனீட்டுச் சொத்து மீதான உரிமை அமலாக்கச் சட்டம் 2002 அதனுடன் கடனீட்டுச் சொத்து (அமலாக்கம்) விதிகள் 2002, விதிகள் 8(6) அதனுடன் 9(1) ஆகியவற்றின் கீழ் அசையாச் சொத்துக்கள் மற்றும் அசையும் சொத்துக்கள் ஆகியவற்றின் விற்பனைக்கான e–ஏல அறிவிப்பு

இதன் மூலம் பொதுமக்களுக்குப் பரவலாகவும் கடன்தாரர்(கள்) மற்றும் ஜாமீன்தாரர்(கள்) ஆகியோருக்குக் குறிப்பாகவும் அறிவிப்பது யாதெனில், கீழே குறிப்பிடப்பட்டுள்ள கடன்தாரர